# செல்வராஜ் என்ற செல்வா M.A.

www.selvaaindia.com

FACEBOOK,TWITTER, INSTAGRAM IDs: selvaaindia2016

Cell : 99944 98712

## PART-II

S/o. சி.வா. வேல்முருகன் (S.Rly. Rtd.) - அனுசுயா (Madurai, Nehru School, Teacher)

2, சின்னகண்மாய் தெரு, கோரிப்பாளையம், மதுரை-625002.

செல்வராஜ் எனும் நான் பிறந்தது 22-03-1961 படித்தது M.A.(His) 1993 முதல் SELVAA TWO WHEELER SPARES என்ற பெயரில் SPARE PARTS வியாபாரம் 2, சின்னகண்மாய் தெருவில் செய்து வந்தேன். 1994 ல் திருமணம் நடந்தது, ஒரு பெண் குழந்தை உள்ளது. 1997 ல் குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து விவாகரத்து வரை போக வேண்டி வந்தது.

2000ல் இந்தியா 100% நேர்மையான நாடு என்று ஐக்கிய நாடுகள் சபைக்கு எழுதினேன். நான் என்னை 100% உண்மையானவனாக சொல்லிலும் செயலிலும் மாற்றிக் கொண்டேன். திருமணத்திற்கு பிறகு பிரிந்து வாழும் இன்று வரை எந்த ஒரு சிறிய தவறும் கூட இல்லாமல் இருந்து வருகிறேன். 1999ல் இருந்து selvaaindia பெயரில் ஒரு இணையதளம் வைத்திருக்கிறேன், அதில் நான் எழுதும் கடிதங்களை பதிந்து வைத்து வருகிறேன். 100% உண்மை என்பதை உலகம் முழுவதும் விரும்புகிறார்கள், மதிக்கிறார்கள் ஆனால் 100% உண்மையை கடைபிடிக்க மறுக்கிறார்கள்.

2001ல் அமெரிக்க அதிபருக்கு கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து ஏவுகணைகளால் தாக்கும் ABM (ANTI BALLISTIC MISSILES) என்ற ஏவுகணை பரிசோதனை செய்த போது அந்த ஆபத்தான சோதனையை நிறுத்த கேட்டபோது பல வருடங்கள் அந்த பரிசோதனை நிறுத்தப்பட்டது.

2002 ல் இந்திய பிரதமருக்கு கங்கை நதியை கன்னியாகுமரி கடலில் கலக்கும் படி நதிகளை இணைக்க சொல்லி, அப்படி இணைப்பதன் மூலம் மிக அதிகமான மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும், உணவு தானிய உற்பத்தியை 3 மடங்கு பெருக்க முடியும், நிறைய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் என்று சொன்னபோது உச்ச நீதிமன்றம் நதிகளை இணைக்கும் திட்டதை 20 வருடத்தில் நிறைவேற்ற உத்தரவிட்டது.

2003ல் அமெரிக்க அதிபர் ஈராக்கின் மீது போர் தொடுக்க முனைந்த போது பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைகளை தீர்க்க ஆலோசனை வழங்க வேண்டும் என்று வாடிகனில் உள்ள போப்பிற்கு எழுதினேன். அந்த நேரம் போப் அமெரிக்க அதிபரை அழைத்து ஆலோசனை வழங்கினார் ஆனால் ஈராக் மீது போர் தொடுக்கபட்டு சதாம் உசேன் கொல்லப்பட்டார்.

2003ல் உலகம் முழுவதும் மனித இனம் தங்கள் அடிப்படை மனித உரிமையான உணவு, உடை, இருப்பிடம் என அடைவதற்கே கடுமையாக போராட வேண்டியுள்ளது. இந்த மனித உரிமைகளை மக்களுக்கு எளிதில் கிடைக்க செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கு எழுதி அதன் காப்பியை மனித உரிமைகளைப் பற்றி பாடமாக படித்து ஆராயும் அமெரிக்காவில் உள்ள கொலம்பியா யூனிவர்சிடிக்கும் அனுப்பினேன். இதன் பின் மதுரை லேடிடோக் கல்லூரியில் இந்தியாவில் எங்கும் இல்லாமல் முதல் முறையாக மனித உரிமைகளை பாடமாக படித்து ஆராய ஒரு பாடமாக நமது ஜனாதிபதி திரு.அப்துல் கலாம் அவர்களால் துவக்கி வைக்கப் பட்டது.

2003 ல் மலேசியாவில் எட்டு தமிழர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டு இரு நாட்களில் எட்டு பேருக்கும் தூக்கு தண்டனை நிறைவேற்றபடக் கூடிய நிலையில் 2003 டிசம்பர் 8ம் தேதியில் டெல்லியில் உள்ள மலேசிய தூதரகத்திற்கு தூக்கு தண்டனையை நிறுத்திவிட்டு குறைந்த பட்ச தண்டனையை கொடுக்க வேண்டி நான் பேக்ஸ் (FAX) அனுப்ப தூக்கு தண்டனை நிறுத்தபட்டதுடன் ஒரு வாரத்தில் எட்டு பேரும் விடுதலை செய்யப்பட்டு விமானத்தில் சென்னை கொண்டு வந்து அரசிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

என் கணிப்பில் இயேசு கிறிஸ்து ஒரு தமிழ் மரபை சேர்ந்தவராக இருக்க கூடும் என தோன்றுகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழர்கள் கிரேக்க ரோமானிய நாடுகளில் முத்து, ஏலக்காய் என பல பொருட்கள் கடல் மூலம் கொண்டு சென்று வணிகம் செய்ததாக தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. பாண்டிய அரசன் அரண்மனை காவலராக கிரேக்க யவனர்கள் இருந்துள்ளனர். மேலும் உலக வரலாறுகளில் பாரத கண்டத்தின் தெற்கிலிருந்து மக்கள் பினிசியர் என்ற பெயரில் தீரு (பைபிளின் கடைசி பக்க MAP மேப்பில் காணலாம்) என்ற இடத்தில் புலம் பெயர்ந்ததாக கூறப்படுகிறது அப்படி தங்கியவர்கள் கிரேக்க போரில் சிறப்பாக ஈடுபட்டதாகவும் கூறபட்டுள்ளது. போரில் சிறப்பாக ஈடுபடுபவர் அரசர் ஆவது இயல்பு. அப்படி அரச குடும்பத்தை சேர்ந்தவரான இயேசு சிறு குழந்தையாக இருக்கும் போதே கொல்லப்பட எடுத்த முயற்சியில் தப்பி பின் அரச பதவி தவிர்த்து போதனைகளை மேற்கொள்கிறார். மக்கள் அவரை பின் தொடர்வதை பார்த்து வஞ்சகமாக கொல்லப்படுகிறார். பைபிள் முதலில் எழுத பட்ட மூலமொழியான ஹீப்ரு மொழியில் இயேசுவை கைது செய்ய வந்துவிட்டார்கள் என அறிந்ததும் இயேசு சீடர்களிடம் உங்கள் வாள்களை எடுத்து கொள்ளுங்கள் என்று சொல்வதாக இருக்கிறது. போர் வீரர்கள்தான் வாள் வைத்திருப்பர். கிரேக்கத்திற்கு கடல் மார்க்கமாக அருகில் உள்ள தேசம் தான் இயேசு பிறந்த இடம். உண்மை என்ன என்பது உண்மையை மறைக்காமல் செய்யப்படும் ஆய்வுகளில்தான் தெரிய வரும்.

2009ல் ஐக்கிய நாடுகள் சபைக்கு உலகம் முழுவதும் பூமியின் மீது உள்ள நாடுகளில் இருந்து ஒரு வருடம் முழுவதும் அரிசி, கோதுமை, காய்கறிகள், பழங்கள், பால், மீன், இறைச்சி என உற்பத்தி செய்யப்படுவது 1000 கோடி டன்கள், ஆனால் பூமியில் வாழும் அத்தனை கோடி மக்களுக்கும் ஒரு நாளைக்கு மூன்று வேளை என வருடம் முழுவதும் உண்ண தேவைப்படுவது 1000 கோடி டன்னில் மூன்றில் ஒரு பங்கு உணவு பொருள் போதுமானது. ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள நாடுகள் இதை கவனம் கொண்டு தேவையான நாட்டுக்கு தேவையான உணவு பொருட்களை சர்வதேச அரசியல் என்று செய்யாமல் உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு தேவையான உணவு எளிதில் கிடைத்து வாழ வழி செய்ய எழுதினேன்.

2009 ல் இலங்கையில் இன அழிப்பை போர் எனும் பெயரில் நடத்தினர். 2013 அமெரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்த போது தமிழ்ஈழம் அமைப்பதே இலங்கை தமிழர்களுக்கு நிரந்தர தீர்வாகும் என்று கூறியிருந்தேன். அப்போது தமிழக சட்டசபையில் தமிழ்ஈழம் அமைப்பதே நிரந்தர தீர்வாகும் என தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

2008ல் பாரத ரத்னா விருது கொடுப்பது அதை பெறுபவர்கள் பொது வாழ்கையில் நேர்மையானவர்களாகவும், தங்கள் சொந்த வாழ்க்கையில் முழுக்க ஒழுக்கமானவர்களாகவும் இருக்க வேண்டும் என்று கூறியிருந்தேன் ஏனென்றால் அதை பெறுபவர்கள் பாரதத்தின் ரத்தினங்களாக பார்க்க படுபவர்கள் என்பதால். 2009க்கு பிறகு பாரதரத்னா விருது கொடுப்பதை பல ஆண்டுகள் நிறுத்தி வைத்தார்கள்.

2004 ல் சுவிஸ் பேங்கில் இந்தியாவில் இருந்து போடப்பட்ட பணம் பல இலட்சம் கோடிகள். இப்படி இந்தியாவில் கொள்ளையடித்த பணத்தை சுவிஸ் வங்கிகள் வாங்கி கொள்வது கடவுளின் சட்டத்திற்கு முரணானது என்று எழுத சுவிஸ் வங்கிகள் தங்கள் வங்கிகளில் போடப்படும் பணம் மற்றும் நபர்களின் விவரங்களைத் தர தயாராக இருப்பதாக அறிவித்தனர்.

இப்படி எழுத வைத்தது எல்லாம் “எல்லாம் வல்ல அவனால்” நடப்பது. எந்த எதிர்பார்ப்பும் இன்றி அவன் செய்ய சொன்னதை செய்தேன். அவன் என்பது மனித இனத்தின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டு இந்த பிரபஞ்சத்தை ஆட்கொண்டு கோடி கணக்கான ஆண்டுகளாக் துல்லியமாக சுழல வைத்து இயங்க வைக்கும் இயற்கையான பிரபஞ்ச சக்தி தான்.

நான் எழுதிய கடிதங்களின் வார்த்தைகளை ஆதாரங்களுடன் அப்படியே என்னுடைய இணைய தளமான www.selvaaindia.com ல் பார்க்கலாம்.